LIBRARY 29 JUL 1961

SRI S. M. ANNAMALAI : இந்த கமிட்டி ரிப்போர்ட் சர்க்காருக்கு கிடைப்பதற்கு முன் 1958-ம் ஆண்டு சட்டம் அமுலுக்கு வந்து விட்டதே, அது பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் ஏற்பட்ட இடங்களில் அமுலுக்கு வந்து விட்டது. அந்த இடங்களில் வழக்குகளை வாங்கி விசாரிக்க யாருக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதை கிராமாந்திர மக்கள் தெரிந்து கொள்வதற்கு அதுபற்றி விளக்கமாக சர்க்கார் ஒரு அறிக்கை விடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்டடி டீம் என்று சொன்னேன். அவர்கள் பரிசீலனை செய்து சிபார்சுகள் அனுப்பித்தால் இந்தியா பூராவும் ஒரேமாதிரி அமைக்கவேண்டுமென்ற எண்ணமில்லை. அந்தந்த ராஜ்யங்களில் நிலைமை, சட்டம், வழக்கங்கள் இதையெல்லாம் வைத்து அதற்கேற்றபடி மாறுதல் ஏற்படும். மாறுதல்கள் ஏற்படும்போது அப்போதைக்கப்போது மக்களுக்கும் தெரிவிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : பஞ்சாயத்து கௌன்சில்களுக்கு இதுவரை இல்லாத அதிகாரங்கள் எல்லாம் நிரம்ப கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னிருந்த அதிகாரங்களை, கிரிமினல், சிவில் கேஸ்களை அவர்கள் விசாரிப்பதிலிருந்து அந்த அதிகாரத்தை எடுக்க என்ன முக்கிய காரணம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கிராம அபிவிருத்தி, கிராம நிர்வாகம் என்பது ஒரு விஷயம். நீதி விசாரித்து நீதி செலுத்துவது வேறு விஷயம். தேர்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்ட்களுக்கு, அதைக் கொடுப்பது முறையா, திருப்திகரமாக இருக்குமா என்பதைப் பரிசீலனை செய்துதான் முடிவாக ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருக்கிறது.

Marketing Committees (staff)

* 242 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மார்கெட்டிங் கமிட்டி சிப்பந்திகளுக்கு சென்னை சர்க்கார் சம்பள திட்டப்படி சம்பள உயர்வு, மற்ற சலுகைகள் அளிக்கப்பட்டனவா?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

(உ) இல்லை என்றால், ஏன் ?

(எ) இனிமேல் அமுல்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

30th January 1961]

(*c*) The employees of the Market Committees are not Government servants and therefore the question of revising their scales of pay does not come under the purview of the Madras State Pay Commission.

(*d*) The question of revising the scales of pay for the posts under the Market Committees is under consideration.

Express buses

*243 *Q.*—**Sri P. G. MANICKAM:** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-61-ல் எந்தெந்த மார்க்கங்களிலே எக்ஸ்பிரஸ் பஸ்கள் (Express Stage carriages) *விடப்படும்?*

The Hon. Sri V. RAMAIAH: A statement[a] containing the particulars is placed on the table of the House.

Sri P. G. MANICKAM: எந்தெந்த இடங்களிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடவேண்டுமென்று கோரி பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன? அதிலிருந்து எந்தெந்த பஸ்கள் விடுவதற்காக அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது?

The Hon. Sri V. RAMAIAH: தனிக் கேள்வி வேண்டும்.

Sri T. T. DANIEL: In view of the fact that the Nagercoil-Tiruchirappalli Express Bus and also the Nagercoil-Tuticorin Express bus are very remunerative, will the Government consider the desirability of running Express buses from Nagercoil to Madras and Nagercoil to Tanjore?

The Hon. Sri V. RAMAIAH: A separate question may be put.

Sri S. M. ANNAMALAI: எந்த அடிப்படையில் துரித பஸ்கள் விடலாம் என்று சர்க்கார் கொள்கை வகுத்திருக்கிறார்கள்? எவ்வளவு தூரம் அவை இருக்க வேண்டுமென்று சர்க்கார் கொள்கை வகுத்திருக்கிறார்கள்? அது அதிக நேரமாகிறது அப்படி அதிக நேரம் ஆவதை மேலும் குறைப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

The Hon. Sri V. RAMAIAH: துரித பஸ்கள் விடுவதற்கு நம் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி எங்கெங்கு விடவேண்டுமென்று கருதுகிறார்களோ அங்கு எல்லாம் விடுவதற்கு முயற்சி எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை மைல் குறைந்தபட்சம் இருக்கவேண்டும் என்பதை இதுவரை நிர்ணயம் செய்யவில்லை.

---

a Printed as Appendix I on pages 130–132 infra.